உ

கடவுள் துணை.

ஸ்ரீமகாலட்சுமிக்கும் - பார்வதிக்கும்,

வாக்குவாதம்.

பி. நா. சிதம்பரமுதலியார்

பிரதர்ஸ் அவர்களாது

சென்னை

வித்தியாரத்னாகர அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923,

உ

ஸ்ரீமகாலட்சுமிக்கும் - பார்வதிக்கும்

வாக்குவாதம்.

காப்பு - நேரிசைவெண்பா.

திங்கட்சடையாருஞ் செந்திருமாலும்மகிழ
வெங்கணுமைசெந்திருசெய் ஏசலுக்குச்-சங்கமில்லாச்
சந்திரனைப்பறித் தனிக்கோட்டிலேபிணைக்குங்
கந்தாரத்தின்கற்பகமே காப்பு.

மண்ணெடுத்தடிப்பட்டு வாணிச்சிப்பிட்டு
வாங்கிவாங்கித்தின்றாரோடி யுங்கள்சிவனார் 1
குன்றெடுத்துப்பால்தயிர் வெண்ணெய்திருடிக்
குந்திகுத்தித்தின்றாரோடி யுங்கள்பெருமாள் 2
பார்த்தன்கையில் கொண்டிருந்தவில்லடிப்பட்டு
பையப்பையவிழித்தாரோடி யுங்கள்சிவனார் 3
வேர்த்துவிடபாலுடன் கட்டியிடைச்சி
வீபுடனடிக்கிறா ருங்கள்பெருமாள். 4
வேண்டுமென்றேசோறுகறி மிக்கவிருக்க
விஷத்தைக்குடித்தாரோடி யுங்கள்சிவனார். 5
மானமுடன்றின்னப்பட்ட வஸ்துவிருக்க
மண்ணைவாரித்தின்றாரோடி யுங்கள்பெருமாள். 6
பசும்பொன்சரப்பளி பதக்கமிருக்கப்
பாம்பணைகனேதரித்தா ருங்கள்சிவனார். 7

தோஷமில்லாதமுத்து நவரத்னமிருக்க
துளசித்தழையேயணிந்தா ருங்கள்பெருமாள் 8
காளியுடன்மிக்கமிக்க வாதுகள்பேசி
காலைத்தூக்கியாடினாரே யுங்கள்சிவனார். 9
நீளமுடன்காளிங்க மடுவிற்குதித்து
நின்றவன்மேலாடினாரே யுங்கள்பெருமாள். 10
தந்தையெனவந்தபெருங் கங்கைநதியைத்
தலைமீதில்வைத்தாரோடி யுங்கள்சிவனார். 11
அந்தமுடனாசைகொண் டிலக்குமிதன்னை
அன்பாகச்சுமந்தாரடி யுங்கள்சிவனார். 12
சேமக்கலங்கொட்டிக்கொட்டிப் பிச்சையெடுக்கும்
சிற்றாண்டிபையனேடி யுங்கள்சிவனார். 13
ஏமத்திலும்சாமத்திலுந் தப்புகொட்டியே
இரந்துண்ணுந்தாதனேடி யுங்கள்பெருமாள். 14
காடுதனில்நுழைந் தெண்ணாயிரம்பெண்கள்
கற்பழித்தாரல்லவோடி யுங்கள்சிவனார். 15
நாட்டறியப்பதினாயிரம் கோபிகைகளை
நன்மையுடன்கற்பழித்தா ருங்கள்பெருமாள். 16
அந்திசந்திபத்மா·சூரனுக்குப்பயந்தே
ஐவேலிக்காயிலொளித்தாருங்கள் சிவனார். 17
தந்தவக்கிரன்றுசத்த வோடிக்குகையிற்
றனுழைந்தாரல்லவோடி யுங்கள்பெருமாள். 18
வைத்துகொள்ளும்மைக்கற்புல்லுந்தின்னுமெருதை
வாகனமாயேறினாரே யுங்கள்சிவனார். 19

நத்தைகுத்துங்கெருடனை வாகனமாக
நாணயமாயேறினரே யுங்கள்பெருமாள். 20
ஆனைத்தோலும்புலித்தோலும் யானைமேயாட்டையும்
அணிந்தவரல்லவோடி யுங்கள்சிவனார். 21
மானமுடன்கானகத்திற் சீதையுடனே
மரவுரிதரித்தாரோடி யுங்கள்பெருமாள். 22
வீடுவாசல்கிடையாமல் சுடுகாட்டிலே
வீற்றிருந்தாரல்லவோடி யுங்கள்சிவனார். 23
நாடுதேசம்வீடுவாசல் காடுகள்விட்டு
நடுக்கடலிற்பள்ளிகொண்டா ருங்கள்பெருமாள். 24
சந்தனக்கெதம்பப்பொடி புனுகுமிருக்கச்
சாம்பல்குழைத்துப்பூசினரே யுங்கள்சிவனார். 25
வந்திரத்திருவருந் திரப்புரத்துவெண்
மண்குழைத்துப்பூசினரே யுங்கள்பெருமாள். 26
போடிபோடிபணடாரமாய் வந்தேபொருநாள்
பிள்ளைகறிசோறுதின்று ருங்கள்சிவனார். 27
வாடிவாடியிடையனாய் வந்தேயொருநாள்
மாட்டுபொங்கல்சோறுதின்று ருங்கள்பெருமாள் 28
முன்னேமுன்னேயுங்கள்சிவ நல்லகுலமோ
மூங்கிலவதரித்தா ருங்கள்சிவனார். 29
என்னடிதாடகை சூர்ப்பனகிநீபோடி
எச்சகுலத்தூணில்வந்தா ருங்கள்பெருமாள். 30
மதுரையிலேயறுபத்து நாலுருவாகி
வந்துவிளையாடினரே யுங்கள்சிவனார். 31

விதமுடனுமைபன்றி மீனுருவாகி
விளையாடுங்கிருஷ்ணனல்லவோ ருங்கள்பெருமாள். ()
குவலயத்திலேமுருகன் வள்ளியைக்கொண்டான்
குறக்குலமாகுமோடி யுங்கள்சிவனார் 33
ஆவலுடனுடுமாடு கன்றுகள்மேய்க்கும்
அந்தவிதக்குலமடி யுங்கள்பெருமாள். 34
நாடறியுமூரறியுந் தாடகைபோடி
நல்லவரோகெட்டவரோ வுங்கள்சிவனார். 35
சூடுவனுன்றுடையிலே சித்திராங்கிபோடி
திருடனல்லோமிகவு முங்கள்பெருமாள். 36
பிரம்மனைச்சும்மாடுடனே கூலியாளாக்கிப்
பிரம்பாலடிப்பட்டாரடி யுங்கள்சிவனார். 37
மறுமம்வெளிவிடாதே பெண்ஹேபிடைச்சி
மத்தாலடிபட்டாரடி யுங்கள்பெருமாள். 38
தேருடனேயானைபரி பல்லக்கிருக்கத்
திருட்டுமாடேறினாரே யுங்கள்சிவனார். 39
அம்புவியில்வெய்யலிலே கம்பளிபோர்த்து
அந்தமாடுமேய்த்தாரோடி யுங்கள்பெருமாள். 40
பணமில்லாதாரிபைப் பரியதாக்கிப்
பாண்டியனுக்கேகொடுத்தா ருங்கள்சிவனார். 41
சினமுள்ளதுரியன்சபையிலே துரோபதைக்கொண்டு
செவ்வையுடன்றுயிலுரித்தா ருங்கள்பெருமாள் 42
ஆபலாயுமையவளைத் தபசுக்கேவிட்டு
அன்றுதனியேதிரிந்தா ருங்கள்சிவனார். 43

இராவணனெடுத்துக்கொண்டு போனசீதையை
நாடறியச்சேர்த்தாரடி யுங்கள்பெருமாள். 44

கட்டத்துணிகிடையாமற் காட்டிலேகிடந்து
கரியுரியைக்கட்டினாரே யுங்கள்சிவனார். 45

வட்டமுடலைகோபிகள் பிடவையையெல்லாம்
வாரிக்கொண்டோடினாரே யுங்கள்பெருமாள். 46

ஓடெடுத்துத்திருநீல கண்டன்மனைவி
லுகந்துசோறுதின்றாரோடி யுங்கள்சிவனார். 47

நாடுதோறுமாயர்பாடி வெண்ணைதிருடி
நன்றிபெறத்தின்றாரோடி யுங்களபெருமாள். 48

முன்பிறந்தமகனுக்குக் கலியாணஞ்செய்ய
முதலிலாமல்விழிக்கிறா ருங்கள் சிவனார். 49

அன்புடனாலிலைமேற் பள்ளிக்கொண்டு
பங்கமில்லாப்பிள்ளைப்பெற்றாருங்கள் பெருமாள். 50

வித்துவான்மனையிற்றினம் விறகுசுமந்து
வீணைராகம்பாடினாரே யுங்கள்சிவனார். 51

தாம்புதடிதோளில்வைத்தே யாடுகள்மேய்த்து
தனமெய்கறுப்பானவர்தா னுங்கள்பெருமாள். 52

அண்டையிலேமண்ணெடுத்து கூலியாளாகி
அமர்ந்தசொக்கநாதரோடி யுங்கள்சிவனார். 53

சண்டையிலேயர்ச்சுனன்றன் கூலியாளாகி
சாரத்தியஞ்செய்தாரோடி யுங்கள்பெருமாள். 54

பார்வதிக்கிடப்பாகந் தந்தபடியால்
பாதிபெண்ணுமா ணுமானா ருங்கள்சிவனார். 55

ஆரணியிலேயொளிக்க யீசனுருந்தான்
அப்போதொருபெண்ணுய்வந்தாருங்கள்பெருமாள்
பாங்குடனேவேடனுக வோடியேவந்து
பன்றிக்கொம்பைமுறித்தாரோடி யுங்கள்சிவனுர் 56
ஆங்காரமாய்க்கம்சன் முன்னனுப்பிய
ஆனைக்கொம்பைமுறித்தாரோடியுங்கள்பெருமாள்.
இங்கிதமாய்தில்லையிலே பாடெடுத்தவர்
இல்லையென்றும்மழுவெடுத்தாருங்கள்சிவனுர். 59
துங்கவாயர்பாடிபெண்கள் கண்டுபிடித்து
தூதனென்றுநெய்யில் கையிட்டாருங்கள்பெருமாள்
கிட்டவந்துவர்ச்சுனனும் கட்டிப்புரட்ட
கீழேவிழுந்துதவிர்த்தாரோடி யுங்கள்சிவனுர் 61
கட்டுணிகுட்டிணியவன் தூதாக்கிபோய்
கால்சிவக்கவிழுந்தாரோடி யுங்கள்பெருமாள் 62
எழுந்திருந்துமார்க் கண்டனுக்காகவந்து
இயமனையுதைத்தாரோடி யுங்கள்சிவனுர் 63
அழுந்திக்கல்லாயிருந்த பெண்ணையுதைத்தே
அனறுமருகமாமுதைத்தாருங்கள்பெருமாள் 64
குடிமாரன்கொல்லையிலே விதைத்தவிதையைக்
கொணடுவந்துசோறுசெய்தாருங்கள் சிவனுர் 65
இடிமழையிந்திரன்பெய்ய மலையைக்கொடையாய்
எடுத்துபொங்கல் சோருதின்றுருங்கள்பெருமாள் 66
தங்கக்கிரீடம்படம்பாகையும் மற்றமிருக்கச்
சடைவளர்த்துக்கட்டினுரே உங்கள்சிவனுர் 67

துங்கமணித்துராய்கள் பலவுமிருக்கச்
சூடிணுரோமயிலிறகை யுங்கள்பெருமாள் 68
மாட்டுப்பாலைத்தான்குடித்து இடையன்கையால்
மண்வெட்டியால்வெட்டுப்பட்டா ருங்கள்சிவனுர் 69
காட்டிலேகிடைந்ததையும் பேய்முலைப்பாலைக்
கண்ணக்கண்ணவுண்டாரேடி யுங்கள்பெருமாள் 70
நக்கனென்றுபேர்படைத்து சுனையில்வந்து
நாடிப்பூத்துகொண்டாரேடியுங்கள்சிவனுர் 71
தக்கவிருகண்ணிலா ததிபாண்டன்வீட்டில்
சாலுக்குள்ளேபுகுந்தாரேடி யுங்கள்பெருமாள் 72
பாசுபதம்வாங்கிவந்த வர்ச்சுனன்முன்னே
பார்ந்தெரிந்தாராகமத்தி லுங்கள்சிவனுர் 73
காசினியில்கஞ்சனெரு காளையாய்வரக்
காலைத்தூக்கிவிளாம்பழமுதிர்த்தாருங்கள்பெருமாள்
திக்குபுகழ்நக்கனேடி யுங்கள் சிவனுர்
திருவாதிரைக்கனிதின்ரு ருங்கள்சிவனுர் 75
வக்காப்போலக்கத்துகிரு யிரணியன்மார்பை
வகிர்ந்துநிரங்குடித்தாரேடியுங்கள்பெருமாள் 76
பாரிலொருகுட்டிக்கு முலைப்பால்கொடுத்து
பன்றியாகதந்தாரோடியுங்கள்சிவனுர் 77
. ாரியமாய்பூமியெல்லா முக்காலேவிழக்
கரப்பன்றியானுரோடி யுங்கள்பெருமாள் 78

வாக்குவாதம்-முற்றிற்றிற்று.